புதுச்சேரி அரசு
நலவழித்துறை இயக்குநரகம்
ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

புதுச்சேரி அரசு, நலவழித்துறையின் கீழ் செயல்படும் அரசு மருந்தகம், இந்திரா நகர் கோரிமேட்டில் தானே புயல் காரணமாக கீழே சாய்ந்தும் முறிந்தும் விழுந்த மரக்கிளைகள் மற்றும் மரங்கள் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. எவ்வளவு மரங்கள் உள்ளன என்ற தகவல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

விதிமுறைகள்

1. அரக்கினால் முத்திரையிடப்பட்ட உறையின் மேல் "மர விற்பனை ஒப்பந்தப்புள்ளி" எனக்குறிப்பிட்டு, முதுநிலைக் கணக்கு அதிகாரி, நலவழித்துறை இயக்குனரகம், சைமோனல் வீதி, பழைய மகப்பேறு மருத்துவமனை வளாகம் புதுச்சேரி என்ற முகவரிக்கு 18.07.2013 அன்று மாலை 3.30 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும். அப்படி திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக பட்சத்தொகையாக கேட்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மரங்களை ஏலம் விட்டதாக அறிவிக்கப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெறும் ஒப்பந்ததாரர்கள் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) முன் வைப்புத் தொகையாக ஒப்பந்தப்புள்ளி உறை சமர்ப்பிக்கும்போது செலுத்த வேண்டும். முன் வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். வாய்மொழி ஏலம் கிடையாது.

3. வெற்றிபெறாத ஒப்பந்ததாரர்களின் முன் வைப்புத்தொகை ஏலம் முடிவுற்றவுடன் திருப்பித்தரப்படும்.

4. மேற்குறிப்பிட்ட நேரம் மற்றும் தேதிக்குப் பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் நிராகரிக்கப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி நிகழ்ச்சி முடிந்த 24 மணி நேரத்திற்குள் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர் முழுத் தொகையையும் அதற்குண்டான விற்பனை வரி 10 சதவீதத்தையும் சேர்த்து செலுத்த வேண்டும். தவறினால் அவர் செலுத்திய முன் வைப்புத்தொகையை இழப்பதுடன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட ஏலத்தையும் இழக்க நேரிடும்.

6. வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி முடிவுற்ற நாளிலிருந்து மூன்று தினங்களுக்குள் தாம் ஏலம் எடுத்த மரங்களை தம் சொந்த செலவில் அப்புறப்படுத்திவிட வேண்டும். விடுமுறை நாட்களில் மரங்களை அப்புறப்படுத்த அனுமதி இல்லை.

7. ஏலம் முடிவடைந்து பணம் பெற்றவுடன் ஏலம் எடுத்தவர் வசம் மரங்கள் ஒப்படைக்கப்பட்டதாக கருதப்படும். மரங்களின் பாதுகாப்பு ஒப்பந்ததாரரைச் சார்ந்தது. நலவழித்துறை எந்த பொறுப்பும் ஏற்காது.

8. ஏலம் முடிந்தபிறகு மரங்களின் எண்ணிக்கை, அளவு மதிப்பு மற்றும் தரம் ஆகியவற்றிற்கு இவ்வலுவலகம் எந்த பொறுப்பும் ஏற்காது.

9. மரங்களை பார்வையிட விரும்பும் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி நாளில் இருந்து முதல் இரண்டு நாட்கள் அலுவலக நேரத்தில் தலைமை அரசு மருந்தக அதிகாரி, அரசு மருந்தகம் அவர்களின் அனுமதி பெற்று பார்வையிடலாம்.

10. யாதொரு காரணமுமின்றி எந்த ஓர் ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கவும் மற்றும் ஒப்பந்தம் குறித்து யாதொரு உடன்பாடின்மை ஏற்படின் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் கீழே கையொப்பமிட்டவருக்கு முழு உரிமை/அதிகாரம் உண்டு.

வ.க. கோபிநாத்
முதுநிலை கணக்கு அதிகாரி

இணைப்பு

| வ.எண் | மரங்களின் வகை | நீளம் | சுற்றளவு | தன்மை | அளவு |
|---|---|---|---|---|---|
| 1. | கொன்னை மரம் | | | விறகு | 3 டன் |
| 2. | தேக்கு மரம் | 23.100 | 2.805 | மரம் | 11.359 கன அடி |
| 3. | “ | 21.780 | 2.475 | “ | 8.339 “ |
| 4. | “ | 16.830 | 2.970 | “ | 9.278 “ |
| 5. | தேக்கு மரக்கிளை | 8.415 | 1.980 | “ | 2.062 “ |
| 6. | “ | 25.245 | 1.815 | “ | 5.198 “ |
| 7. | பென்சில் மரம் | 33.165 | 2.640 | “ | 14.447 “ |
| 8. | “ | 23.760 | 2.805 | “ | 11.684 “ |
| 9. | “ | 23.100 | 1.155 | “ | 1.926 “ |
| 10. | “ | 16.500 | 1.485 | “ | 2.274 “ |
| 11. | பென்சில் மரக்கிளை | 8.250 | 0.990 | “ | 0.505 “ |
| 12. | “ | 9.900 | 0.660 | “ | 0.270 “ |
| 13. | “ | 16.500 | 1.155 | “ | 1.376 “ |

வ.க. கோபிநாத்
முதுநிலை கணக்கு அதிகாரி